


முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் தலைமையில் வல்லநாடு பகுதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை ஆற்றினார். உடன் மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றியச் செயலாளர்கள் கே.கே.ஆர்.ஜெயக்கொடி, ராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் அருணாச்சலம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கரூரில் 41 பேர் மரணத்திற்கு காரணம்

# காவல்துறைதான் என அபாண்டத்தை அள்ளி வீசுவது முதல்வருக்கு அழகா?

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு வலைதளப் பதிவு!



நெல்லை, ஜூலை 14 -

உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கண்காணிப்பில் சி.பி.ஐ. விசாரணையில் இருக்கும் 41 பேர் இறந்த கரூர் சம்பவம் குறித்து பொதுவெளியில் பேசுவது இந்திய அரசியல் சட்டப்படி குற்றம் என்ற விவரம் தெரியாதவரா எங்கள் தமிழ்நாட்டின் முதல்வர்? இது பதவி பிரமாணத்திற்கு எதிரான குற்றம் என்று முதல்வருக்கு தெரியாதா? என முன்னாள் சட்டபேரவை தலைவர் மு. அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

41 பேர் கொலைக்கு காரணம் காவல்துறைதான் என்ற அபாண்டத்தை அள்ளி வீசுவது முதல்வருக்கு அழகா? இதனை இருமுறை டெல்லி சி.பி.ஐ. விசாரணைக்கு சென்ற போது மேற்படி குற்றச்சாட்டை தெரிவித்தீர்களா? தமிழக முதல்வர் அரசு தலைமை செயலாளர், முதல்வரின் தனிச்செயலாளர்கள் வழிகாட்டுதலோடு ஆட்சி நடத்துகிறாரா? அல்லது சினிமா தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் வழிகாட்டுதலோடு ஆணவ வசனம் பேசி வருகிறாரா?

சட்டமன்றத்தில் Party Fund என்று சொன்னதும் தி.மு.க.வினர் ஓடி விட்டார்கள் என்று வாய்மொழியாகவும், உடல் மொழியாகவும் நக்கலடிக்கும் CM சார் தேர்தலுக்கு முன் உங்கள் சட்டமன்ற வேட்பாளர்கள் ஒவ்வொருவரிடமும் ரூபாய் 2 கோடி முதல் ரூபாய் 10 கோடி வரை Party Fund பெற்றுக் கொண்டு தான் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதாக உங்கள் ரசிகர்களும்,த.வெ.க. கட்சியினரும் புலம்புவது உங்கள் காதுகளுக்கு எட்டவில்லையா? இது Party Fund இல்லையா? இதுதான் தூய ஆட்சி இலட்சணமா?

இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.

### நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# சுதந்திரப் போராட்ட மாவீரன் அழகுமுத்துக்கோன் பிறந்தநாள் விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமை!

நெல்லை, ஜூலை 14 -

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இந்திய விடுதலைப் போராட்ட வீரர், ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய பாளையக்காரர் மாவீரன் அழகுமுத்துகோன் அவர்களின் 269 வது குருபூஜையை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்

ம.கிரகாம்பெல் தலைமையில் பணகுடி பேருந்து நிலையம் மற்றும் வள்ளியூர் பழைய பேருந்து நிலையத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த சுதந்திர போராட்ட தியாகி மாவீரன் அழகுமுத்து கோன் அவர்களின் திருவுருவ படத்திற்கு கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

நிகழ்வில் மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர் நம்பி வள்ளியூர் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம், பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மாடசாமி, அவைத்தலைவர் அன்பரசு,வள்ளியூர் பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் கண்ணன்,பேரூர் துணை செயலாளர்கள் ஜான்சி ராஜம்,ஜெயராஜ்,மல்லிகா, குமரகுரு பண்ணையார்,தி.மு.க. நிர்வாகிகள் ஆச்சூர் ராமசாமி,காதர் மைதீன்,கோபி கோபால கண்ணன், தில்லை ராஜா, வழக்கறிஞர் சுப்பிரமணி, சுரேஷ், சுரேஷ் பாக்கியம், சிவா, லெட்சுமணன், ராதாகிருஷ்ணன், சிவராம கிருஷ்ணன், ஹரிதாஸ், பனி பாஸ்கர், கவுன்சிலர்கள் மாடசாமி, கார்த்திக் சுபாஷ், ஆபிரகாம், ஆனந்தி ராஜேஷ், மாணிக்கம், முகிலன், கல்யாண சுந்தரம், முருகன், சுடலையாண்டி, கோபால் , பெருமாள், சிங்கம், அகிலன், பூபதி ராஜன், வெற்றிவேல், சி.பா.மூர்த்தி, கண்மணி, திராவிடர் கழக நம்பிராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தென்காசியில் ஜவுளி அமைச்சகத்தின் 'சாமர்த்' திட்டத்தின்கீழ்

# ஜவுளித்துறை திறன் மேம்பாட்டுத் திட்டச் சான்றிதழ் வழங்கும் விழா!

## மரு.கலைகதிரவன் எம்.எல்.ஏ. – ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தென்காசி, ஜூலை 14 -

தென்காசியில் சாமர்த் ஜவுளித் துறை திறன் மேம்பாட்டுத் திட்டச் சான்றிதழ் வழங்கும் விழாவில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்றனர்.

ஒன்றிய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் 'சாமர்த்' (Samarth) திட்டத்தின் கீழ் ஜவுளித் துறை திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை முடித்த வர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் விழா தென்காசி குற்றாலம் மெயின் ரோடு, சிந்தாமணியில் அமைந்துள்ள ஈ.வி.எம். கார்மெண்ட்ஸ் வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியை தர்மரத்தினா டெக்ஸ்டைல் பிரைவேட் லிமிடெட்,வேலு சோஷியல் ஆக்டிவ் பப்ளிக் சேரிடபிள் டிரஸ்ட் மற்றும் ஈவிஎம் கார்மெண்ட்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து விழாவினை ஒருங்கிணைத்திருந்தனர்.

விழாவில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் முதன்மை விருந்தினராகவும்,சிறப்பு விருந்தினராக தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேலு டிரஸ்டின் நிர்வாக அறங்காவலர் வி.முருகன் வரவேற்புரை யாற்றினார்.

டிஆர்டிபிஎல் (DRTPL) ஸ்கில்ஸ் அமைப்பின் பி.டி. எம்.கே.மாரிதுரை மற்றும் ஒருங்கிணைப்பாளர் எஸ். மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிறைவில் ஈ.வி.எம். கார்மெண்ட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஆர். அனுசியா நன்றியுரையாற்றினார்.




தென்காசி குற்றாலம் மெயின் ரோடு சிந்தாமணியில் உள்ள ஏ.வி.எம். கார்மெண்ட்ஸ் வளாகத்தில் சாமர்த் ஜவுளித்துறை திறன் மேம்பாட்டு திட்ட சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் பங்கேற்று சான்றிதழ் வழங்கினார். உடன் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.உள்பட பலர் உள்ளனர்.

### சிங்கம்புணரியில் முன்னாள் அமைச்சர்

# செ.மாதவன் பிறந்தநாள் விழா - கால்பந்தாட்ட இறுதிப் போட்டி!




சிங்கம்புணரி, ஜூலை 14-

சிங்கம்புணரியில் முன்னாள் அமைச்சர் செ.மாதவன் 93 வது பிறந்த நாளை முன்னிட்டு மாதவன் கால்பந்து கழகம் சார்பாக பாரி வள்ளல் பள்ளியில் 17 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளும் 6ம் ஆண்டு மாநில அளவிலான கால்பந்தாட்டப் போட்டி 10 ம் தேதி தொடங்கியது.

விழாவிற்கு பள்ளித் தலைவர் வெற்றிச்செல்வி ராஜமாணிக்கம் தலைமை வகித்தார்.

பள்ளித் தாளாளர் அருளாளன், உமா அருளாளன் சாந்தி செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பள்ளி முதல்வர் சியாம் பிராங்க்ளின் டேவிட் வரவேற்றார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக டீன் மாணிக்கவாசகம் போட்டியை தொடங்கி வைத்தார். இறுதிப் போட்டி நேற்று முன்தினம் (12.07.2026 - ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது.

அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் சுப்பையா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். முன்னாள் எம்.எல்.ஏ. அருணகிரி, பேரூராட்சி தலைவர் அம்பலமுத்து, துணைத் தலைவர் இந்தியன் செந்தில் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சுழற்கோப்பைகள் வழங்கப்பட்டது.

இப்போட்டியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளை அணிகள் கலந்து கொண்டனர்.

இதில் தொழிலதிபர் ஆர்.எம்.எஸ்.சரவணன், ஒன்றியச் செயலாளர் பூமிநாதன், நகரச் செயலாளர் கதிர்வேல், நகர அவைத் தலைவர் சிவக்குமார், ஒன்றிய இளைரணி மனோகரன் பொதுக்குழு உறுப்பினர் சோமசுந்தரம், தொழிலதிபர் கணேசன், ஆசிரியர் சுப்பிர மணியன், மேலாளர்கள் கிருஷ்ணன், சரவணன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை பெற்றோர் ஆசிரியர் மாணவர் மாணவியர் தலைவர் டாக்டர் ராஜ்குமார் உடற்கல்வி ஆசிரியர்கள் மணிமேகலை சின்னையா, சரண்யா பள்ளி ஆசிரியக்கள் நிர்வாகத் தினர் மாணவர்கள் கலந்து செய்தனர்.

### சொ.பெருமாள்வி-கே.முருகன்-எஸ்.வி.சுரேஷ் முன்னிலை! நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# சுதந்திரப் போராட்ட வீரர் அழகு முத்துக்கோன் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. தலைமை!

நெல்லை, ஜூலை 14 –

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முதல் சுதந்திரப் போராட்ட மாவீரன் அழகுமுத்துக் கோன் அவர்களின் ஜெயந்தி விழாவை முன்னிட்டு,

பாளையங்கோட்டை தெற்கு பஜாரில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட மாவீரன் அழகுமுத்துக் கோன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் தலைமையில் மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள்,மத்திய மாவட்ட அவை தலைவர் வி.கே.முருகன், மாவட்ட துணை செயலாளர் எஸ். வி. சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர். தர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிப் பாண்டியன்,நெல்லை கிழக்கு மாநகர கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் தினேஷ்,பகுதி பொறுப்பாளர் டாக்டர் சங்கர்,வழக்கறிஞர் சங்கர் குமார், சையது முகைதீன், துபாய் சாகுல் ஹமீது சாமுவேல்,மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள்மணி,வட்ட செயலாளர்கள் பேபி கோபால்,சடாமுனி, பிரேம கணேசன், லெனின், பாபு குமார், பி.பி.ராஜா,மேகை செல்வம்,மாரிமுத்து, பாளை ஆர். சதீஷ் குமார்,பால மகேஷ், பாளை மண்டல தலைவர் பிரான்சிஸ், மாமன்ற உறுப்பினர்கள் பேச்சியம்மாள், கந்தன்,முன்னாள் மாமன்ற உறுப்பினர் பாலன் என்ற ராஜா,முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் சுடலைக்கண்ணு, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனித்தா, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் பேங்க் இஸ்மாயில், டாஸ்மாக் தொழிற்சங்க மாவட்ட தலைவர் அரசன் என். ராஜ்,

மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் எல்ஜசி பேச்சிமுத்து, தச்சநல்லூர் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் மகேஷ் ஆதித்தன்,மானூர் மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சாமுவேல்,ஆயிரத்தம்மன் திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் பழ. கண்ணன்,விளையாட்டு மேம்பாட்டு அணி மாநகர துணை அமைப்பாளர் அன்னராஜ், கழக இலக்கிய அணி மாநகர துணை அமைப்பாளர் நச்சினார்க்இனியன், இலக்கிய அணி பாளை பகுதி அமைப்பாளர் சங்கரநாராயணன்,பாளை பகுதி தொண்டரணி அமைப்பாளர் செல்வம்,மேலப்பாளையம் பகுதி இலக்கிய அணி சஞ்சய் குமார், இளைஞர் அணி இளங்காமணி கணேஷ்,வட்ட பிரதிநிதிகள் சண்முகசுந்தரம்,புகாரி, தலைமை கழக பேச்சாளர்கள் நெல்லை முத்தையா,நெல்லை ரவி,குண்டு பாண்டியன் உள்பட நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில,மாவட்ட கழக நிர்வாகி கள், மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதி கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டனர்.

### நெல்லை மாவட்ட ஜென்சி தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் மாஸ் மு.மைதீன் ஏற்பாடு!

# நெல்லை மாவட்டம் ஜென்சி தி.மு.க. சார்பில் இளைஞர்கள் சந்திப்பு!

## மாநகர மகளிரணி வலைதள பொறுப்பாளர் ஜி.மதீஹா முன்னிலை! 500 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்பு!

நெல்லை, ஜூலை 14 –

நெல்லை மாவட்டம் ஜென்சி தி.மு.க. சார்பில் இளைஞர்கள் சந்திப்பு நிகழ்வு பாளையங் கோட்டை பி.பி.எல்.மஹாலில் நெல்லை மாவட்ட ஜென்சி தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் மாஸ். மு.மைதீன் ஏற்பாட்டில் மற்றும் தலைமையில் நெல்லை மத்திய மாவட்ட மாநகர மகளிரணி வலைதள பொறுப்பாளர் ஜி.மதீஹா (சட்டக் கல்லூரி மாணவி) முன்னிலையில் நடை பெற்றது.

நிகழ்ச்சியை பாளை தொகுதி தி.மு.க. சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர் முத்துலெட்சுமி தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர்கள் இளம் பெண்கள் மற்றும் கல்லூரி மாணவர்,மாணவியர்கள் உள்பட 500 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.தமிழ் தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது.

பின்னர் நெல்லை ஜென்சி ஒருங்கிணைப்பாளர் மாஸ்.மு.மைதீன் உரையாற்றினார்.

நிகழ்வில் அனைவருக்கும் ரிஸ்டு பாண்ட் ஜென்சி தி.மு.க நெல்லை என்ற பதிவு வழங்கப்பட்டது.பின்னர்

வாய்ஸ் ஆப் ஜென்சி போர்டு வைக்கப்பட்டு அனைவரும் தங்களுக்கு தோன்றிய கருத்துக்களை அதில் எழுதினார்கள்.அதனைத் தொடர்ந்து "உங்கள் குரல் என்ற தலைப்பில் கருத்துக்கள் பதிவு செய்ய அனைவருக்கும் பேச வாய்ப்பு அளிக்கப்பட்டது.

நிகழ்வில் இளம் பேச்சாளர்கள் அப்துல் வஹாப் அதாயி,கந்தபரமேஸ்வரன், பெபிலா மற்றும் தன்னாலவர்கள் சரஸ்வதி, மனோ, ராம், ஜோஷ்வா,அப்துல் வஹாப்,மஸ்தான், ரீகா, மதிபாண்டியன், சுபா,ஆசிக்,ரம்யா,சந்தியா,மகாலட்சுமி, உதுமான்,யாசர் உள்பட இளைஞர்கள், இளம் பெண்கள் மற்றும் மாணவர்கள், மாணவியர்கள் உட்பட 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மருத்துவர் ஸ்ரீ பூவிழி நன்றியுரையாற்றினார்.

நிகழ்ச்சிக்கு முன்னதாக கழக கொடி ஏற்றப்பட்டது.

நிகழ்ச்சி நடத்துவதற்கான அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்த நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.வுக்கு கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை மாவட்ட ஜென்சி தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் மாஸ்.மு. மைதீன் சிறப்பாக செய்திருந்தார்.

# அண்ணன் பேரச்சொல்லு!




நரகம்

எதில்
இடமுண்டோ
தெரியாது

அண்ணன்
கூட்டத்துல
மிதிபட்டுச்
செத்தா

"யாரு லஞ்சம்
கேட்டாலும்

அண்ணன்
பேரச் சொல்லு..."

மொதல்ல
உங்க
நொண்ணனை

காருக்கு
உரிய வரிய
கட்டச் சொல்லு...

காட்டாம
மறச்ச
கருப்பு பணக்
கணக்குக்கு

மொதல்ல
"வெள்ளை
அறிக்கை
விடச் சொல்லு"...

அப்புறம்

கொல்லையும்
புல்லையும்
காட்டி
எதிர்லாயத்து
குதிரைகளை
களவாடும்
காரியத்தை
கைவிடச்சொல்லு...

ஆனா ஒண்ணு

சொர்க்கம்

குடும்பத்துக்கு
பணமுண்டு
கூடவே
அரசுப்பணி
உண்டு....

அப்புறம்
முக்கியமான
விசயம்...
"வாடா
போடான்னு"

"வாயில
நல்லா
வந்திரும்னு

இன்னும்
எவ்வளவு
தான்
தரம் தாழ்ந்து
பேசினாலும்

பைத்தியங்கள்
மீது
பகுத்தறிவுக்கு
கோபம்
வருவதில்லை..."

என்னநாஞ்
சொல்றது!



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்